1970 மார்ச் 31]

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, இந்த எலித் தோலை எந்த அளவுக்கு அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடிகிறது? ஏதாவது அந்நியச் செலாவணி கிடைக்கிறதா? கேரளாவில தவளைகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி பெறுகிறார்களே அதேபோல் செய்யத் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைத்தான் சொன்னேன். எலியைப் பிடித்து தோலை உரித்துக் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன; விவசாயிகள் இதில் நாட்டம் காட்டவில்லை.

திரு. இல. பலராமன்: எலிகளைப் பொறுத்தவரையில், அவை உணவு தானியங்களைப் பாழ் படுத்துகின்றன என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, இப்படிப்பட்ட எலிகள் எவ்வளவு இருக்கின்றன என்று அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எலிகளின் உற்பத்தியில் உறுப்பினர் இவ்வளவு அக்கறை காட்டுவார்கள் என்றால், நிச்சயமாக தனிக் கேள்வி பேட்டால், அந்தக் கணக்கையும் எடுத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Instructors in Industrial Training Institutes

* 617 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Industrial Training Institute Instructional Staff Association have submitted any Memorandum to the Hon. the Minister;

(*b*) if so, the details of their demands;

(*c*) whether this Government propose to consider any of their demands; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சபை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Will the Hon. Minister be pleased to state the persons who had been trained in these I.T.I. every year and the number of people who got employment? I think there are a large number, nearly 50 per cent who are without employment. If so, will the Hon. Minister state what steps he proposed to take to see that these people are given employment?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி ஐ. டி. ஐயில் பணிபுரியும் ஆசிரியர்கள் பற்றியது.

திரு. சி. கோவிந்தராஜன்: அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று, அவர்களுடைய ரிடைர்மெண்ட் வயது 55-க்குமேல் நீட்டவேண்டும் என்பது. மற்ற இடங்களில் டீச்சிங் ஸ்டாப்களுக்கு 55-லிருந்து 58 என்று உயர்த்தப்பட்டிருப்பதுபோல், இங்கேயும் இவர்கள் டீச்சிங்ஸ்டாப்களாக இருப்பதால் அதே சலுகையைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது 55 வயதாக இருப்பதையே யார் யாருக்குக் குறைக்கலாம் என்றுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது, ஆனால் இருப்பதை எடுக்கக்கூடாது என்று ஆசிரியர்களுக்குக் குறைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதால், 55 வயதைக் கூட்டுவதாக இல்லை.

@ 524-526-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.